பிரிவு 1. திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 51/1981) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை 13-5-1981 காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை மாலை 6.56க்கு ஒத்திவைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

எதுவுமில்லை

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

208. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 501 முதல் 620 வரை).

209. மீனளத் துறையின் 1980-81 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மதிப்பீட்டுக் குழு அளிக்கும் (ஏழாவது சட்டமன்றப் பேரவை) நான்காவது அறிக்கை (தமிழ்).

210. எழுதுபொருள் அச்சுத்துறைப் பற்றிய 1980–81 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மதிப்பீட்டுக் குழு அளிக்கும் (ஏழாவது சட்டமன்றப் பேரவை) ஐந்தாவது அறிக்கை (தமிழ்).

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS